ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2464/02 - 2025 නොවැම්බර් මස 24 වැනි සඳුදා - 2025.11.24

2464/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: VE/DS/ACQ/WS/192.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2017/WS/192.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | வடக்கு |
| மாவட்டம் | : | யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | தீவகம் தெற்கு, வேலணை |
| கிராம அலுவலர் பிரிவு | : | மண்கும்பான் - J/11 |
| கிராமம் | : | மண்கும்பான் |
| கடத்திரல் வரைபட இல. | : | 910358 |
| மொத்த விஸ்தீரணம் | : | 1.8670 |

காணி எடுப்பதற்கான நோக்கம்: யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் அல்லைப் பிட்டி நீர் சுத்திகரிக்கும் புதிய கிணறுகள் அமைப்ப தற்கான காணி மற்றும் நீர் இறைக்கும் இயந்திர அறைகள், நீர் சுத்திகரிக்கும் பழைய கிணறுகள் மற்றும் நீர்தாங்கிக் கோபுரம் என்பன அமைந்துள்ள காணியினை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்பு சபைக்கு வழங்குவதற்காக.

**01. துண்டு இல. 1 - காணியின் பெயர்: கமானி தோட்டம், செட்டிகாடு; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: கந்தசாமி சிவனேஸ்வரன் மனைவி பத்மலோசனி; விஸ்தீரணம்: 0.5289 ஹெக்டயார்.**

வடக்கு: காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை மற்றும் வாய்க்கால்; கிழக்கு: வாய்க்கால் மற்றும் காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை; தெற்கு: காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம்,


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

உரிமையாளரை அறிய முடியவில்லை மற்றும் வீதி (பிரதேச சபை); மேற்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை.

02. **துண்டு இல. 2 - காணியின் பெயர்: அறிய முடியவில்லை; விபரம்: எட்டு நிரந்தரக் கட்டிடங்கள் மற்றும் ஒரு நீர்கோபுரம்; உரிமை கோருபவர்: உரிமையாளரை அறிய முடியவில்லை; விஸ்தீரணம்: 1.3381 ஹெக்டயார்.**

வடக்கு: காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை; தெற்கு: காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை; மேற்கு: காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தீவகம் தெற்கு, வேலணை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

த. அகிலன்,
பிரதேச செயலாளர்,
தீவகம் தெற்கு,
வேலணை.

பிரதேச செயலகம்,
தீவகம் தெற்கு,
வேலணை .
2025, நவெம்பர் 12.

EOG 11 - 0134